[செல்வி ஜெ ஜெயலலிதா] [2013 *ஏப்ரல்* 1

ரூபாய் செலவில் புதிய சாலையினை அமைக்கவும் எனது தலைமையிலான அரசு முடிவு எடுத்துள்ளது என்பதை மன மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நெடுஞ்சாலைத் துறையில் என்னால் அறிவிக்கப்பட்ட இந்தத் திட்டங்களின்மூலம், தமிழகத்திலுள்ள சாலைப் போக்குவரத்து மேன்மை அடைவதுடன் நகர்ப் பகுதிகளில் ஏற்படும் வாகன நெரிசல்கள் தவிர்க்கப்பட்டு, பயணிகள் எந்தவித சிரமமுமின்றி தாங்கள் விரும்பிய இடத்திற்கு குறைந்த நேரத்தில் சென்றடையவும் தொழில் வளர்ச்சி மேலும் மேன்மை அடையவும் வழிவகை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

3. புதிய சாலைகள், பாலங்கள், பல்லடுக்கு வாகன நிறுத்துமிடம் அமைத்தல் குறித்த முதலமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.*

முனைவர் செ.கு. தமிழரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலைகள் உலகத்தையே சுருக்கிக்கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட உலகம், சமூகத்தைச் சுருக்கித் தருகிற வழியாக அமைகிறது என்று மூவுலக வேளாளர்கள் சொல்வார்கள். எவ்வளவுக்கு எவ்வளவு சாலைகள் உருவாகின்றனவோ, அவ்வளவுக்கு அவ்வளவு மனித சமூகமே ஒருசேர ஒரு கட்டுக்குள், கட்டுப்பாட்டுக்குள் வருகிற சூழல் வரலாற்றிலே உருவாகும். நீண்ட அந்த தொலைநோக்கு உணர்வோடு இன்றைக்குத் தமிழகம் இந்தியாவிலே நகர்ப்புறம் ஆவதிலே முன்னணி மாநிலமாக இருக்கிறது. வளர்ந்து வரும் நகர்ப்புற வளர்ச்சியிலே கிராமங்கள் மாறி, நகர்ப்புறங்கள் வளர்கிற முன்னணிப் பாதையிலே இருக்கிற இந்த மாநிலம், சென்னையைப் பொறுத்தவரையில் இந்தியாவில் இரண்டாவது மாநகரமாக இருக்கக்கூடிய அளவிற்கு வளர்ந்து வருகிற ஒரு மாநகரம். இந்த மாநகரத்தின் தேவைகளைக் கருத்திலேகொண்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு நூற்றுக்கணக்கான கோடி ரூபாய்களை சாலை மேம்பாட்டிற்காக அள்ளி, அள்ளித் தந்து, (மேசையைத்*

தட்டும் ஒலி) தமிழகம் முழுமையிலும் ஒருசேர ஒரு புதிய நவமாநிலம் உருவாவதற்கு வித்திட்டிருக்கிறார்கள் என்கிறபோது இந்த பாராட்டு மிக்க, சிறப்புமிக்க திட்டத்தை மனப்பூர்வமாக வாழ்த்தி பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பாதைகள் போடப்படுவது, உருவாக்கப்படுவது மிகச் சிறந்த சான்றோர்களால். தமிழகத்தை முன்னேற்ற பாதையிலே கொண்டு போவதற்கு இப்படி சீரிய பாதைகளை நாளும் நாளும் அறிவித்து வருகிற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்தப் புதிய திட்டங்கள் புதிய தமிழகத்தை உருவாக்கும் என்று சொல்லி, மாமன்னன் அசோகன் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே சாலை போட்டான், மரம் வளர்த்தான், கிணறு வெட்டினான் என்று இன்னமும் வரலாறு வாழ்த்துகிறது. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகாலம் தமிழகமும் உங்களை வாழ்த்தும் வரவேற்கும். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

திரு. உ. தனியரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறைதோறும் கோடிக்கணக்கான ரூபாய்களைத் தந்து, மக்கள் சமூகம் இன்புற்று, மகிழ்வோடு வாழ்வதற்காக தினந்தோறும் நலத் திட்டங்களை வாரி வழங்கி வருகின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த நிதியாண்டின் முதல், விதி 110–ன்கீழ் ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களை அள்ளித் தந்து, தலைநகரம் சென்னையில் துறைமுகங்களுக்குச் சென்று வருகின்ற வாகனங்களினுடைய நெருக்கடி குறித்து, பல வருடங்கள், பலரால் ஆய்வு செய்யப்பட்டு, அந்த நெருக்கடியைப் பற்றி நம்முடைய மொத்த மக்கள் சமூகமும் ஒரு வேதனையை அனுபவித்து வந்த நிலையை மாற்றுவதற்கு அந்தச் சாலைகளையெல்லாம் தரம்படுத்தி, மேம்படுத்துவதற்கு கோடிக்கணக்கான ரூபாயைத் தந்த முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நம்முடைய மக்களுடைய பயண நேரத்தைக் குறைப்பதற்கும், எரிபொருள் சிக்கனத்தைப் பாதுகாப்பதற்கும், தரமான சாலைகள் அவசியம் என்பதை உணர்ந்து, தொழிலும், மக்களினுடைய வாழ்க்கைத் தரமும் உயருவதற்கு சாலை வசதி, அதனுடைய கட்டமைப்பு மேம்படுத்தப்பட வேண்டும் என்பதை உணர்ந்து, இன்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கிற திட்டம் நல்ல திட்டம்,

முற்பகல் 11–20

தலைநகரத்திற்கு மட்டுமல்லாமல், அதை தஞ்சை புறவழிச் சாலை மட்டுமல்ல, பர்கூர் போன்ற பின்தங்கிய மாவட்டத்தில் இருக்கின்ற சிப்காட் தொழிற்சாலைகளுக்கும் அதனை விரிவுப்படுத்தி, கிராமப்புறங்களிலேகூட சாலை இணைப்பு மேம்பாட்டிற்காகக் கோடிக்கணக்கான ரூபாய்களைத் தந்து உதவியிருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இரயில்வே மேம்பாலங்கள் இல்லாத இடங்களில் 5 நிமிடம், 10 நிமிடம், 15 நிமிடம் காத்திருக்க வேண்டிய நிலையை மாற்றுவதற்கு சுமார் 18 இரயில்வே மேம்பாலங்களை 11 மாவட்டங்களிலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் முதன்முறையாக மாநில அரசினுடைய நிதியிலிருந்து, (மேசையைத் தட்டும் ஒலி) மாநில அரசினுடைய சாலை மேம்பாட்டு நிதியிலிருந்து இரயில்வே மேம்பாலங்களைக்கட்ட அறிவித்திருப்பது உள்ளிட்ட பல்வேறு சாலை மேம்பாட்டு வசதிகளுக்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அள்ளித் தந்திருக்கிற நல்ல திட்டங்களை வரவேற்று, பாராட்டி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிவரன் அவர்கள்.

*__திரு. பி.வி. கதிரவன்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாடு வளர்ச்சி அடையவேண்டுமென்றால் சாலை வசதி முக்கியம் என்பதைக் கருத்தில் கொண்டு, இங்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தொடர்ந்து அதற்காகப் பணியாற்றி வருகிறார்கள்; அதில் ஒன்றும் மாற்றுக் கருத்து இல்லை. இன்று, விதி 110–ன் கீழே சாலைக்காக, சாலை வசதிகளுக்காக, வாகனப் பாதுகாப்புக்காக பல ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களை அறிவித்து சாலை வசதிகளைச் செய்திருக்கின்றார்கள். புறவழிச் சாலைகள் எங்கெங்கு தேவைப்படுகின்றனவோ அங்கெல்லாம் புறவழிச் சாலைகள் அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். இரயில்வே மேம்பாலம் என்பது முக்கியமான ஒன்று. பல பகுதிகளிலே, அது இல்லாததால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. அதனால் இதற்காக 11 மாவட்டங்களில் 18 இடங்களில் மேம்பாலம் அமைக்க 948.30 கோடி ரூபாயை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள். சிப்காட் போன்ற தொழிற்சாலை நிறுவனங்களிலிருந்து தனியாக வாகனங்கள் செல்வதற்காக 126 கோடி ரூபாய் ஒதுக்கி சிறப்பு செய்திருக்கிறார்கள். அதேபோன்று

வாகனங்களை நிறுத்துவதற்காக கிட்டத்தட்ட 200 கோடி ரூபாயை ஒதுக்கி, வசதி செய்து கொடுத்திருக்கின்றார்கள்.

இதையெல்லாம் பார்க்கும்பொழுது, நமது தமிழகத்தை இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாகக் கொண்டுவரவேண்டுமென்ற முயற்சியை (மேசையைத் தட்டும் ஒலி) தொடர்ந்து எடுத்துக்கொண்டு வருகின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை எங்களது அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சி மனமாரப் பாராட்டி, வாழ்த்துகிறது. நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலைக் கட்டமைப்பு மிகவும் இன்றியமையாதது என்பதை உணர்ந்து இன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110–ன்கீழ் எட்டு வகையான திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். சென்னை மாநகரம் தொடங்கி கிராமங்களில் இருக்கக்கூடிய ஆறுகளின்மீது பாலங்கள் கட்டுவது வரை சிறப்பான திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். இந்த அறிவிப்புகளைச் செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மனிதநேய மக்கள் கட்சியின் சார்பாக எங்களுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.

திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலைக் கட்டமைப்பு, சாலை மேம்பாட்டுத் திட்டம் போன்ற எட்டு திட்டங்களை இன்றையதினம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். போக்குவரத்து, புதிய பாலங்கள், வட்டச் சாலை, புறவழிச்சாலை போன்ற பல கோடி ரூபாய் மதிப்புள்ள சாலை வசதிகளைத் தமிழகத்திற்கு அர்ப்பணித்திருக்கிறார்கள். சின்னக்காவனம், திருவண்ணாமலை, வேலூர், திருச்சி, சேலம், திருநெல்வேலி, திருவாரூர், காஞ்சிபுரம், நாகப்பட்டினம், விழுப்புரம், கோயம்புத்தூர் போன்ற பல இடங்களுக்கு இரயில்வே பாலங்கள் அறிவித்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட 161 கோடி ரூபாயிலே ஆறுவழிச் சாலைகளும், 98 கோடி ரூபாயிலே நான்குவழிச்

சாலைகளும், 126 கோடி ரூபாயிலே சிப்காட் இணைப்புச் சாலையும் அமைத்திருக்கிறார்கள். சாலை வசதி மூலமாக தமிழகத்தில் சாலைகளிலே ஓடுகின்ற வண்டிகளுக்கு, மாண்புமிகு அம்மா அவர்கள் இப்பொழுது இருக்கின்ற நெரிசலைக் குறைப்பதற்கான ஒரு பெரிய திட்டத்தை அறிவித்து இருக்கிறார்கள். அவர்களுக்கு சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாக நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 11–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை விதி 110–ன்கீழ் தமிழக முதல்வர் அவர்கள் சாலைக் கட்டமைப்பு, சாலை மேம்பாட்டிற்கான திட்டங்கள், போக்குவரத்துச் செலவினைக் கருத்தில் கொண்டு 18 இரயில்வே மேம்பாலங்கள் 18 கட்டுவது, இருவழிச் சாலைகள், ஆறுவழிச் சாலைகள், புறவழிச் சாலைகள் போன்றவற்றை அமைத்துக் கொடுப்பதற்கான முறையில் ஆயிரக்கணக்கான கோடி ரூபாயை மாநில அரசினுடைய நிதியிலிருந்து வழங்குவதாகக் கூறி, ஏற்பட்டுவரக்கூடிய விபத்துகளிலிருந்து விலைமதிப்பற்ற மனித உயிர்களைக் காப்பாற்றக்கூடிய முறையிலும், போக்குவரத்து நெரிசலில் இருந்து பாதுகாக்கக்கூடிய முறையிலும், எரிபொருள் செலவைக் குறைப்பதற்கான நடவடிக்கையின் மூலமாகவும் குறிப்பிட்ட காலத்திற்குள் குறிப்பிட்ட இடத்திற்குச் சென்றடையக்கூடிய முறையில் தமிழகத்தினுடைய ஒட்டுமொத்தமான வளர்ச்சியில் சாலைக் கட்டமைப்பின் மூலமாக தொழில் வளர்ச்சி பெருகுவதற்கான முறையில், நடவடிக்கை மேற்கொண்டு, இரயில்வே மேம்பாலங்கள், சாலைகளுக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பது ஒட்டுமொத்த தமிழகத்தினுடைய வளர்ச்சிக்கு ஒரு அடிப்படை வசதியாக அமையும் என்பதனை இந்த நேரத்திலே சொல்லி, இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாகப் பாராட்டி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம்

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 'திட்டங்களுக்காக மக்கள் அல்ல, மக்களுக்காக திட்டங்கள்' என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இம்மாமன்றத்தில் ஏற்கெனவே அறிவிப்புச் செய்ததற்கு முத்தாய்ப்பாக இன்று தமிழக மக்கள் நலனில் பெரிதும் அக்கறை கொண்டதன் விளைவாக, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறையின்மூலம் மக்களுக்கு நன்மை பயக்கும் அரிய பல அற்புதமான, திட்டங்களைச் செயல்முறைப்படுத்துவதற்கு சட்டமன்றப் பேரவை விதி 110–ன்கீழ் அற்புதமான அறிவிப்புகளை இங்கே தந்திருக்கின்றார்கள்.

சென்னை தரமணி முதல் மாமல்லபுரம் வரை உயர்மட்ட சாலை அமைப்பது, திருநின்றவூர் முதல் பாடி வரையிலான சாலையை நான்கு வழிச் சாலையாக அகலப்படுத்துவது, ஆறுவழிச் சாலையை அகலப்படுத்துவதற்கு தண்டலம்–பேரம்பாக்கம்–தக்கோலம் அருகில் 39.40 கிலோ மீட்டர் நீள பாடி சாலையை நான்குவழிச் சாலையாக அகலப்படுத்துவது, இரண்டாம் கட்டம் தஞ்சாவூர் புறவழிச்சாலை அமைப்பது, நபார்டு வங்கி உதவியுடன் 131 ஆற்றுப்பாலங்கள் கட்டுவதோடு, 215 கிலோ மீட்டர் சாலைகள் அமைப்பது, 11 மாவட்டங்களில் 18 இரயில்வே மேம்பாலங்கள் மற்றும் கீழ்பாலங்கள் அமைப்பது, சிறுசேரியில் தனியார் பங்களிப்புடன் பல்லடுக்கு வாகன நிறுத்துமிடம் கட்டடம் கட்டுவது, கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் அருகே சிப்காட் தொழில் வளாகத்திலுள்ள தொழிற்சாலைகளுக்குச் சாலை அமைக்க நிதி ஒதுக்கீடு செய்வது, இப்படி பல்வேறு திட்டங்களுக்காக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிதியுதவி செய்து ஆணையிட்டதற்கு இத்துறையின் சார்பாகவும், என் சார்பாகவும் மனமார்ந்த நன்றியை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களுக்குச் சமர்ப்பித்து நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் நாட்டில் பல்வேறு சாலைகளை அமைப்பதற்காக விதி 110–ன்கீழ் சில திட்டங்களைப் படித்தார்கள்.

சாலைகள் அமைப்பதை யாரும் மறுக்கப் போவதில்லை, வரவேற்கிறோம். ஆனால் **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள், தனியாகக் கேளுங்கள். உட்காருங்கள். விதி 110–ன்கீழ் அறிக்கையில் விவாதம் இல்லை. (குறுக்கீடு) நன்றிதான் சொல்கிறார்கள். நீங்கள் நன்றி சொல்வதாக இருந்தால் சொல்லலாம். (குறுக்கீடு) நீங்கள் நன்றி சொல்வதாக இருந்தால் சொல்லலாம், இதிலே விவாதம் இல்லை. (குறுக்கீடு) விதி 110–ன்கீழ் அறிக்கையில் விவாதம் கிடையாது. (குறுக்கீடு)

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி 110–ன்கீழ் ஒரு அமைச்சரோ, முதலமைச்சரோ அறிக்கை படித்தால் அதை ஆதரித்தோ, எதிர்த்தோ பேசக்கூடாது. அதுதான் சட்டமன்ற விதி. ஆகவே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு விளக்கம் தான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மேற்கொண்டு விளக்கங்களைக் கேட்பதற்கு இடமில்லை. (குறுக்கீடு) உட்காருங்கள் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** ஒரேயொரு விளக்கத்தைச் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. ஆட்சிக் காலத்தில் இதே நடைமுறை கடைப்பிடிக்கப்பட்டிருக்கிறது.

முற்பகல் 11–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள், அனைவருக்கும் விதிமுறைகளைப் பற்றி பாடம் எடுப்பவர், இந்த அவையின் விதிமுறைகளை அவரே சரியாகத் தெரிந்துகொள்ளாமல் வைத்திருப்பது ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) விதி 110—ன்கீழ் முதலமைச்சரோ அல்லது ஓர் அமைச்சரோ இந்த அவையிலே ஓர் அறிக்கையை வாசித்தால் அதன்மீது எவ்விதமான விவாதமும் கூடாது. அதைப்பற்றி எந்த விளக்கமும் கேட்கக்கூடாது. எந்த விளக்கமும், கேள்விகளும் கேட்க முடியாது என்றுதான் விதி 110 கூறுகிறது.

முந்தைய காலங்களில் விதி 110—ன்கீழ் ஓர் அறிக்கையை முதலமைச்சரோ அல்லது ஓர் அமைச்சரோ வாசித்தபின் அதன்மீது யாரும் பேசமாட்டார்கள். ஆனால், சில மாண்புமிகு உறுப்பினர்கள் விதி 110—ன்கீழ் வாசிக்கப்படும் அறிக்கைகளுக்குத் தங்களுடைய மகிழ்ச்சியைத் தெரியப்படுத்தவும், தங்களுடைய நன்றியைக் கூறுவதற்கும் வாய்ப்புக் கேட்டுக்கொண்டதால் அப்படிப்பட்ட வாய்ப்பை அளிப்பது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் விருப்பமாகும். அவ்வளவுதானேதவிர, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் இப்போது கேள்விகளை எழுப்புகிறார். அதற்கு இந்த விதியின்கீழ் இடம் இல்லை என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதில் விவாதம் ஒன்றுமில்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. துரைமுருகன், இதில் விவாதம் ஒன்றுமில்லை, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் பேசியது அவைக்குறிப்பில் ஏறாது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது நம்முடைய ஆட்சிக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட பழக்கம் அல்ல. ஏற்கெனவே, திரு. கருணாநிதி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது விதி 110—ன்கீழ் அவர் ஓர் அறிக்கையை வைத்த பின்பு அதற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் நன்றி தெரிவித்து பேசியிருக்கிறார். அது அவைக் குறிப்பிலே இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. துரைமுருகன், உட்காருங்கள். (குறுக்கீடு) இதில் விவாதம் வேண்டாம், உட்காருங்கள். விவாதம் ஒன்றுமில்லை, உட்காருங்கள்.

ஒரு நாடு நல்ல சட்டங்களால் ஆளப்படுவதோடு, தொலைநோக்குச் சிந்தனையோடு செயல்படும் நல்லவரால், வல்லவரால் ஆளப்பட வேண்டுமென்றார் சாக்ரடீஸ். பொருளாதாரத்தின் அங்கங்களான தொழில் துறை, வேளாண்மையின் வளர்ச்சிக்கு சாலைகள் மற்றும் பாலங்கள் மிக அவசியம் என்பதை உணர்ந்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் தொலைநோக்குச் சிந்தனையோடு இன்றைக்கு அறிவிப்புச் செய்திருக்கிறார்கள். பகுத்தறிவுக்குத் தந்தை பெரியார், அழகு நடை அடுக்குப் பேச்சுக்கு பேரறிஞர் அண்ணா, அயராது வழங்குவதற்கு வள்ளல் தன்மையுள்ள புரட்சித் தலைவர், மேற்கண்ட குணங்களோடு தொலைநோக்குச் சிந்தனையோடு செயல்படும் ஆளுமைத் தகுதிக்கு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டிலுள்ள சாலைகள் மேம்பாட்டிற்காக சிறப்பான அறிவிப்புகளை வெளியிட்டுள்ள மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மாண்புமிகு உறுப்பினர்களின் நன்றியோடு என்னுடைய நன்றியையும் இணைத்துக்கொள்கிறேன்.

4. சிறப்புக் கவன ஈர்ப்பு

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளுக்கு ஜி.பி.எஸ். கருவிகள் வாங்குவதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளுக்கு ஜி.பி.எஸ். கருவிகள் வாங்குவதில் நடைபெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகள் குறித்து திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. மு.க. ஸ்டாலின், திரு. துரைமுருகன், திரு. எ.வ. வேலு, திரு. அர. சக்கரபாணி ஆகியோர் சட்டப்பேரவை விதி 56–ன்கீழ் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அ. சவுந்தரராசன், செல்வி கே. பாலபாரதி, திரு. க. பாலகிருஷ்ணன் ஆகியோரும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எம். ஆறுமுகம்,